


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# இயற்கை

தவளை ஒன்று
தாமரை இலையில்
தித்தித் தோம் என ஆடுது
அதன்
ஆட்டம் பார்த்து
அசந்து போன
பட்டாம் பூச்சி பாடுது

பச்சைப் புல்லில்
மஞ்சள் பூக்கள்
மிச்சம் இன்றி சிரிக்குது
அங்கே
செக்கர் வானம்
சொக்கி மயங்கி
பக்கம் வரவே பார்க்குது


கண்ணைத் திறந்தால்
கவின்மிகு இயற்கை
உன்னை ஈர்த்து மினுக்குது
அந்த
இயற்கை யால்தான்
இன்று வரைக்கும்
மனிதர் குலமே சிறக்குது.

– ரமேஷ் வைத்யா



## உள்ளே...

4 பூனை பூனைதான்!



8 காலணி தேடும் கம்பளிப்பூச்சி



18 இரத்தப் பரிசோதனைக்குப் பயந்த முகில்!



தேன்சிட்டு
Then Chittu Fortnightly

- 16 – 31 ஜூலை 2023
- சிட்டு 2 இதழ் 16
- 16 - 31 July 2023
- Chittu 2 Issue 16

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
69-71/A,
சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு – 600 124.

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்.
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006

மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





ஓவியம்: பா. செந்தில்குமார்

# பூனை பூனைதான்!

**ராஜாவுக்குப் பூனைக்குட்டி ஒன்று பரிசாகக் கிடைத்தது. எப்போதும் அதை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார். தூங்கும்போதும் தன் பக்கத்திலேயே படுக்கவைத்துக் கொண்டார்.**

ஒரு நாள் மந்திரி, ராஜாவிடம் கேட்டார்: "ராஜாவே, நாம் இந்தப் பூனைக்கு என்ன பெயர் வைப்பது?"

"இந்த அழகான பூனைக்கு மிகச் சிறந்த பெயர் வைக்க வேண்டும்" என்றார் ராஜா.

மறுநாள் ராஜா அறிவித்தார்: "என் பூனைக்கு வைப்பதற்கு சிறப்பான பெயர் சொல்பவர்களுக்குப் பரிசு தருவேன்!"

ஒருவர் சொன்னார்: "புலியின் உருவமும் வீரமும் கொண்ட இந்தப் பூனைக்கு 'டைகர்' என்று பெயர் வைத்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும்! ஏனென்றால் ஆங்கிலத்தில் புலிக்கு, 'Tiger' என்று பெயர்."

"இது சிறப்பான பெயர்!" என்றார் ராஜா.

மற்றொருவர் சொன்னார்: "புலியைவிட யானைதானே சிறந்தது? ஆங்கிலத்தில் யானைக்கு, 'Elephant' என்று பெயர். எனவே, நாம் இதற்கு, 'எலிஃபண்ட்' என்று பெயர் வைக்கலாம்!"

"இது சிறந்த பெயர்!" என்றார் ராஜா.

இன்னொருவர் சொன்னார்: "யானையைவிட நிலவுதான் சிறந்தது. அதுதான் மிகவும் உயரத்தில் இருக்கிறது. ஆங்கிலத்தில் நிலவுக்கு 'Moon' என்று பெயர். எனவே, நாம் இந்தப் பூனைக்கு, 'மூன்' என்று பெயர் வைக்கலாம்!"

"இது சிறந்த பெயர்!" என்றார் ராஜா.

வேறொருவர் சொன்னார்: "நிலவை மேகம் மறைத்துவிடுமே. நிலவைவிட மேகம்தான் சிறந்தது. ஆங்கிலத்தில் மேகத்துக்கு, 'Cloud' என்று பெயர். எனவே, நாம் பூனைக்கு, 'கிளவ்டு' என்று பெயர் வைக்கலாம்!"

"இது சிறந்த பெயர்!" என்றார் ராஜா.

ஒருவர் சொன்னார்: "மேகத்தைக் கலைப்பதற்குக் காற்று போதும். மேகத்தைவிட காற்றுதான் சிறந்தது. ஆங்கிலத்தில் காற்றுக்கு, 'Wind' என்று பெயர். எனவே, பூனைக்கு, 'விண்ட்' என்று பெயர் வைக்கலாம்!"

"இது சிறந்த பெயர்!" என்றார் ராஜா.

மற்றொருவர் சொன்னார்: "காற்றை ஒரு மலை தடுத்து நிறுத்திவிடுமே! காற்றைவிட மலைதான் சிறந்தது. எனவே, ஆங்கிலத்தில் மலைக்கு, 'Mountain' என்று பெயர். பூனைக்குட்டிக்கு, 'மவுண்டன்' என்று பெயர் வைக்கலாம்."

"இது சிறந்த பெயர்!" என்றார் ராஜா.

இன்னொருவர் சொன்னார்: "ஒரு எலி நினைத்தால் மலையைக் குடைந்துவிடுமே! மலையைவிட எலிதான் சிறந்தது! எனவே, ஆங்கிலத்தில் எலிக்கு, 'Rat' என்று பெயர். பூனைக்கு, 'ரேட்' என்று பெயர் வைக்கலாம்!"

"இது நல்ல பெயர்" என்றார் ராஜா.

அப்போது அங்கிருந்த சிறுமி ஒருத்தி உரக்கச் சிரித்தாள். அவள் சொன்னாள்:

"ஐயே! எலியைப் பிடிக்கும் பூனையை யாராவது எலி என்று அழைப்பார்களா?

இதற்கு 'கேட்' என்றுதான் பெயர் வைக்க முடியும்! ஆங்கிலத்தில், 'Cat' என்றால் பூனை!"

"ஒரு பூனைக்குப் பூனை என்று பெயர் வைப்பதுதான் சரி!" என்றார் ராஜா.

அனைவரும், "ராஜாவின் பூனை வாழ்க! ராஜாவின் பூனை வாழ்க!" என்று வாழ்த்தினார்கள்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



# ஆண்டெனா வேன்

## எப்படி இயங்குகிறது என்று பார்ப்போமா?

தொலைக்காட்சிகளின் வேன்கள்தான் இப்படி மேலே குடை போன்ற ஆன்டெனாவுடன் நிற்கும். தொலைக்காட்சிகளில் நேரலையாக நாம் நிகழ்ச்சிகளைப் பார்க்க உதவுவது ஆண்டெனா வேன் (Antenna Van) இப்படி ஆண்டெனா பொருத்தப்பட்ட வேனுக்கு, 'டி.எஸ்.என்.ஜி. வேன்' (Digital Satellite News Gathering Van) என்று பெயர். இது ஓ.பி. வேன் (Outdoor Broadcasting Van) என்றும் அழைக்கப்படுகின்றது.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# உயர்திணை - அஃறிணையைக் கண்டுபிடி




- சு. மீனாட்சி

**விடைகள்**

1. பசு - அஃறிணை
2. ரோஜா பூ - அஃறிணை
3. புத்தகம் - அஃறிணை
4. விளையாட்டு வீரர் - உயர்திணை
5. சிறுவன் - உயர்திணை
6. சிறுமி - உயர்திணை
7. பேருந்து - அஃறிணை
8. நாற்காலி - அஃறிணை
9. குதிரை - அஃறிணை
10. கடல் - அஃறிணை
11. நாய் - அஃறிணை
12. கிளி - அஃறிணை




பள்ளிக் கல்வித் துறையின்

**மாணவர் உதவி எண்**

**14417**

மாணவர்களே!

உங்களுக்கு எதற்காவது அச்சமா?

உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?

உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?

தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?


# நல்ல தமிழ் அறிவோம்



| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| அகங்காரம் | செருக்கு |
| அக்கினி | தீ - எரி |
| அங்கத்தினர் | உறுப்பினர் |
| அங்கீகாரம் | ஒப்புதல் |
| அதிகாரி | கண்காணிப்பவர் |
| அநீதி | முறையற்றது |
| அபயம் | அடைக்கலம் |
| அபாயம் | துன்பம் |
| அபூர்வம் | அருமை |
| அம்சம் | கூறு |
| அவசரம் | விரைவு |
| அவசியம் | தேவை |
| அனுபவம் | பட்டறிவு |
| ஆகாயம் | வானம் |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஒரு செயல் எப்போது, எப்படி, எங்கே நடந்தது போன்ற விவரங்களை நமக்குச் சொல்வது வினையுரிச் சொல் [Adverb] ஆகும்.**

எடுத்துக்காட்டு


1. Raja walked slowly. [Manner]
2. Akhil came here. [Place]
3. He was absent yesterday. [Time]

கோடிட்ட இடங்களைத் தகுந்த வினையுரிச் சொல்லால் (Adverb) நிரப்புக.

1. He drinks coffee ________
2. She spoke ________
3. She plays the piano ________
4. The children love to play ________
5. He Kicked the ball ________







Answers : 1. daily, 2. softly, 3. beautifully, 4. outside, 5. quickly

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. We went ________ the beach.
(a) to (b) too (c) two



2. He had ________ pens.
(a) too (b) two (c) to



3. There are ____ many books in the Shelf
(a) to (b) two (c) too



4. He walks ______ school.
a) two (b) to (c) too



Answers : 1. a 2. b 3. c 4. b

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in







# Caterpillar looks for a shoe

**Caterpillar has lost its shoes.**

It hurts her feet.

"May I borrow a shoes from you spider?" but spider's shoes is too small to wear.

Caterpillar is sad without her shoes.

She goes to a frog and said, "May I borrow a shoes from you frog?" but frog's shoes is too big to wear.

She goes to a grasshopper and said, "May I borrow a shoe from you grasshopper but grasshopper's shoe is too tough to wear.

She goes to a crab and said May I borrow a shoe from you, crab? But Crab's shoes are useful for digging. They are too sharp to walk.


Caterpillar is too tired to search any more. she curled up on a leaf to rest.

Caterpillar decides to make a cosy cocoon to sleep in.

Days pass by. When the caterpillar steps out of her cocoon....

She doesn't need shoes anymore!

Authar: Somsanouk Bouttavong



# காலணி தேடும் கம்பளிப்பூச்சி

**கம்பளிப்பூச்சியின் காலணி தொலைந்துவிட்டது.**

அதனால் அதன் பாதங்கள் புண்ணாகிறது.

"எனக்கு உன் காலணிகளை கடனாத் தருவியா?" என்று சிலந்தியிடம் கேட்டது. ஆனால் சிலந்தியின் காலணிகளோ மிகவும் சிறியவை.

காலணியில்லாததால் கம்பளிப் பூச்சிக்கும் மிகவும் வருத்தமாக இருந்தது.

தவளையிடம் சென்று "எனக்கு உன் காலணியைக் கடனாகத் தரமுடியுமா?" என்று கேட்டது. ஆனால் தவளையின் காலணியோ அதற்கு மிகவும் பெரியதாக இருந்தது.

"வெட்டுக்கிளியே, எனக்கு உன்னோட காலணிய கடன் கொடுப்பியா?" ஆனால் வெட்டுக்கிளியின் காலணிகளோ கரடுமுரடாக இருந்தன.

கம்பளிப்பூச்சி, நண்டிடம் சென்றது. "எனக்கு உன் காலணிகளைக் கடனாத் தருவியா?" என்று கேட்டது. ஆனால் நண்டின் காலணிகளோ மண்ணைத் தோண்டுவதற்கானவை. கூர்மையாக இருந்த அக்காலணிகளை அணிந்துகொண்டு நடக்க முடியாது.

கம்பளிப்பூச்சி காலணிகளுக்காகத் தேடித் தேடிக் களைத்துப் போனது. ஒரு இலையில் சுருண்டு படுத்து ஓய்வு எடுக்கத் தொடங்கியது.

அந்தக் கம்பளிப்பூச்சி தனக்கென வசதியான ஒரு புழுக்கூண்டை செய்துகொண்டு, அதில் தூங்க முடிவெடுத்தது.

நாட்கள் நகர்ந்தன. அந்தப் புழுக்கூட்டிலிருந்து கம்பளிப்பூச்சி வெளியே வந்தபோதோ...

அதற்குக் காலணிகள் தேவைப்படாமல் போனது.

ஆசிரியர் : சம்சனக் புட்டவாங்

தமிழில் : அன்பு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பூனைத் தீவு எங்கிருக்கிறது?



## PALS என்றால் என்ன?

–செ.சாய்ஸ்ரீ, 6ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, செங்கல்பட்டு.

கடலின் அடியில் எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க மீன்களைப் பயன்படுத்த முடியுமா என்று அமெரிக்கக் கடற்படை ஆராய்ச்சி செய்து வருகிறது. சூழலில் ஏற்படும் சிறிய அசைவுகளைக்கூட கடல் மீன்கள் உணர்ந்து வேறு திசையில் செல்லும். அதனால் கடலுக்குள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற எதிரிகளின் வாகனங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், குப்பைகளைக் கண்டறியவும் மீன்களைப் பயன்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் பெயர்தான் PALS (Persistent Aquatic Living Sensors: நிலையான நீர்வாழ் உயிரின உணரிகள்).

## பென்சில்களின் மீது HB, 2B என்றெல்லாம் எழுதப்பட்டிருப்பது ஏன்?

–கே.வினோத், 7ஆம் வகுப்பு, ந.உ.நி.பள்ளி, புதுக்கோட்டை.

பென்சிலின் உள்ளிருக்கும் கருநிற எழுது பொருள் (Lead). அதாவது பென்சில் முனை, பென்சில் கரியால் (Graphite) தயாரிக்கப்படுகிறது.

இந்தப் பென்சில் கரி சற்று மென்மையாக இருக்கும். இதில் களிமண் சேர்க்கும்போது இதன் கடினத்தன்மை அதிகரிக்கும்.

பென்சில் கரியின் அளவு குறைவாகவும் களிமண்ணின் அளவு அதிகமாகவும் உள்ள பென்சில் முனை கடினமாக இருக்கும். இதைக் 'கடின முனைப் பென்சில்' (Hard lead pencil) என்று சொல்வார்கள். இந்தப் பென்சிலால் வரையும் கோடுகள் குறைந்த தெளிவுடன் இருக்கும்.

இதுபோன்று, பென்சில் கரியின் அளவு அதிகமாகவும் களிமண்ணின் அளவு குறைவாகவும் உள்ள பென்சில் முனை மென்மையாக இருக்கும். இது 'மென்முனைப் பென்சில்' (Soft lead pencil) எனப்படும். இந்தப் பென்சில்களால் வரையும் கோடுகளில் கருமை அதிகமாக இருக்கும். வரையும் கோடு எந்த அளவு குறைந்த தெளிவுடன் இருக்கிறது என்பதற்கு ஏற்ற வகையில் கடின முனைப் பென்சில்களை H எனும் எழுத்தைப் பயன்படுத்தி வகை பிரிப்பார்கள். இந்த H பென்சில்களைவிடக் குறைந்த தெளிவுடையவைதான் 2H, 3H பென்சில்கள்.

இதுபோல மென்முனைப் பென்சில்களை B எனும் எழுத்தைப் பயன்படுத்தி வகை பிரித்திருக்கிறார்கள். கோட்டின் கருமைதான் இதன் அடிப்படை.

B பென்சில்களால் வரைவதைவிட 2B பென்சிலில் வரையும் கோடு அதிகக் கருமையுடன் இருக்கும். இப்படி 3B, 4B, 5B, 6B என்றெல்லாம் பென்சில்கள் உள்ளன. B வகை பென்சில்களில், எண் அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில், கோட்டின் கருநிறம் அதிகரிக்கும். H க்கும் B க்கும் இடைப்பட்ட கரு நிறத்தில் எழுதும் பென்சில்தான் HB.



## 'பூனைத் தீவு' எனும் தீவு இருக்கிறதா?

–மி.கிருஸ்மிடில்லா, 2ஆம் வகுப்பு, மா.ந.நி.பள்ளி, மதுரை.


பூனைகள் நிறைய வசிக்கும் தீவைத்தான் 'பூனைத் தீவு' என்று சொல்கிறார்கள். ஜப்பானில் இருக்கும் 'டாஷிரோஜிமா' (Tashirojima) தீவு முழுக்கவும் ஆயிரக்கணக்கான பூனைகள் இருக்கின்றன. இங்கே வருபவர்கள் பூனைகளுக்கு ஏதாவது உணவு கொண்டு வருவார்கள். அதனால் பூனைகள் இங்கே மகிழ்ச்சியாக இருக்கின்றன. இங்கே நூற்றுக்கும் குறைவான மனிதர்கள்தான் வசிக்கிறார்கள்.

## ஸ்டெதஸ்கோப் எப்படி இயங்குகிறது?

–எஸ். செல்வின் ஜபராஜ், 8ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, இராணிப்பேட்டை.

நம் காதுகளுக்குள் 'செவிப்பறை' (Eardrum) எனும் ஒரு படலம் உண்டு. ஓசை வந்து படும்போது செவிப்பறை அதிரும். இந்த அதிர்வுதான் மூளைக்கு, சமிக்ஞைகள் (Signals) அனுப்பும்.

இதுபோன்ற ஒரு பகுதி ஸ்டெதஸ்கோப்பிலும் இருக்கிறது. இதற்கு 'டயப்ரம்' (Diaphragm) என்று பெயர். ஸ்டெதஸ்கோப்பை நம் நெஞ்சில் வைக்கும்போது இதயத் துடிப்பு போன்ற சிறிய ஓசைகள் டயப்ரமில் அதிர்வுகளை ஏற்படுத்தும். இந்த அதிர்வுகள்தான் குழல் மூலம் ஓசையாக மருத்துவரின் செவியை அடையும். மருத்துவர் இந்த ஓசையைக் கேட்டு நமக்கு ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்று கண்டுபிடிப்பார்.




**கேளுங்கள்!** உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை – 600 006. மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in


www.Padasalai.Net www.CBSEtips.in




# அழகான உண்டியல் செய்வோம்!




சிறிய அளவில் உள்ள அட்டைப் பெட்டியை எடுத்துக்கொள்ளவும்.




அதை நன்கு மூடி, பெட்டியின் அனைத்துப் பக்கங்களிலும் வண்ணத்தாளை ஒட்டவும்.





பெட்டியின் பக்கவாட்டுப் பகுதியில் படத்தில் உள்ளவாறு வரைந்துகொள்ளவும்.





படத்தில் காட்டியபடி துளையிடவும்.




பெட்டியின் மற்ற பக்கங்களில் பொம்மைகளை வரைந்து ஒட்டி அழகுபடுத்தவும்.



இப்போது அழகான பயனுள்ள சேமிப்பு உண்டியல் தயார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# ஞாபக விளையாட்டு!


கீழே உள்ள படத்தை 30 நொடிகள் மட்டுமே பார்க்க வேண்டும். பிறகு, கண்களை மூடிக்கொண்டு இப்படத்தில் பார்த்த விலங்குகள் எவை, எத்தனை கட்டங்களில் இருந்தன என்பதைச் சொல்ல வேண்டும். நண்பர்களோடு சேர்ந்து குழுவாக இதை விளையாடலாம்.



இதில் நம் நாட்டு விடுதலைக்காகப் போராடிய இருவரின் முகங்கள் இரு பாதியாக உள்ளன.

## யார் யாரென்று

கண்டுபிடியுங்கள்.



## இரு படங்களுக்கும் இடையே உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடி



விடைகள் 20ம் பக்கம்




சைல்டு லைன்
1098
(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in




# மாணவர் கலைவண்ணம்



சே .பவிஷ்கா, 8ஆம் வகுப்பு.
ஊ.ஒ.ந.நி.பள்ளி, பரளி,
மோகனூர் ஒன்றியம்,
நாமக்கல் மாவட்டம்.





கே. ரூபிகா, 8ஆம் வகுப்பு.
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
சிந்தகமணிபெண்டா,
திருப்பத்தூர் மாவட்டம்




எச். கிரிதரன், 8ஆம் வகுப்பு.
ஊ.ஒ.ந.நி.பள்ளி, சோலூர்,
ஆம்பூர், திருப்பத்தூர்.



ஆர். அட்சயா, 9ஆம் வகுப்பு.
அ.மே.நி.பள்ளி,
தாதாபுரம்,விழுப்புரம்.



பா. ரஞ்சனி, 8ஆம் வகுப்பு.
அரசு உயர் நிலைப்பள்ளி,
குரும்பபாளையம்,
ஈரோடு.



எஸ். ஜனனி, 8ஆம் வகுப்பு.
ஊ.ஒ.ந.நி.பள்ளி, புலியமங்கலம்,
ராணிப்பேட்டை மாவட்டம்



எம். ஜெயஸ்ரீ, 8ஆம் வகுப்பு.
அரசு மேல்நிலைப் பள்ளி,
[illegible], செங்கல்பட்டு.




ரா. கௌசிக், 8ஆம் வகுப்பு.
ஊ.ஒ.ந.நி.பள்ளி, [illegible],
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in







எஸ் .அனுஷ்கா, 9ஆம் வகுப்பு,
அ.வெ.மே.நி.பள்ளி,
கே.வி.குப்பம், வேலூர்.



இ. மாதவன், 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணபதி சமுத்திரம்,
தூத்துக்குடி.




அ. ஹர்சிதா, 9ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி,
அம்மாபேட்டை,
சேலம்.



சீ. விவேகா, 8ஆம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
நெய்யாடுபாக்கம்,
காஞ்சிபுரம்.




சி. சந்தோஷ், 7ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, இருசனாம்பட்டி,
சேலம்.



வி. தீபிகா, 9ஆம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
தாதாபுரம்,விழுப்புரம்.




தே. பகவத், 8ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, கு.வலையபட்டி,
வையம்பட்டி,
திருச்சி.



ர. முகில் அரசன், 7ஆம் வகுப்பு,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, த.கிருஷ்ணாபுரம்,
திருப்பத்தூர்.

# மாணவர் கடிதம்

ஒருவரின் தோற்றத்தைக் கண்டு எடை போடக்கூடாது என்பதை 'யானையும் எறும்புகளும்' எனும் சிறுகதை எனக்கு உணர்த்தியது

- மீனாட்சி, அ.மே.நி.பள்ளி, தூத்துக்குடி

...

அறிவோம் ஆயிரம் பகுதி, 'ஒளியாண்டு' தலைப்பின் கீழ் உள்ள அனைத்தையும் படித்து வியந்து போனேன். சிந்திக்கவும் வைத்தது.

- ரா.ஹரிஷ், ஊ.ஒ.ந.நி.பள்ளி, கும்பகோணம்.

...

ஜூலை மாதத் தேன்சிட்டு இதழில் வெளியான உலக மரபுச் சின்னங்கள் பற்றி தகவல்களைப் படித்து அறிந்து கொண்டேன். மிகவும் வித்தியாசமான தகவல்கள்!

- எஸ்.விமலா, அ.மே.நி.பள்ளி, கரூர்.

...

கோபத்தினால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது என்பதனை எனக்கு உணர்த்தியது தேன்சிட்டில் வெளியான இருமொழி கதை.

- ந.அமுதன், அ.மே.நி.பள்ளி, மதுரை.

...

ரோபோக்களோடு பேசும் சரண்யா எனும் படக்கதையின் ஓவியங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. கதையையும் ரசித்துப் படித்தேன்.

வ.ஜெயஸ்ரீ, சென்னை ந.நி.பள்ளி, எழும்பூர்.

...

இனிக்கும் தமிழ் பகுதியில் நாம் நடைமுறையில் பயன்படுத்தும் வார்த்தைகளான ஓர் மற்றும் ஒரு எங்கு,எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுடன் அழகாக விளக்கி இருந்தார்கள். அதில் கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சியை மிகவும் ஆர்வமுடன் செய்து பார்த்தேன்.

- ச.ஸ்டீபன் ராஜ்,அரசு உயர்நிலைப் பள்ளி, வாலாஜாபாத்.

...

வாழைப்பழத்தில் இத்தனை சத்துக்கள் உள்ளதா? என்பதை நலம் நாடுவோம் பகுதியில் படித்துத்தான் தெரிந்து கொண்டேன். இனி என் உணவுப் பழக்கத்தில் நான் தவறாமல் எடுத்துக் கொள்வேன்.

- ம.ஜீவா, அ.மே.நி.பள்ளி, திருவண்ணாமலை.

...

தேன்சிட்டு இதழில் வெளிவந்த ஓவியங்களில் என் பள்ளி நண்பன் வரைந்த ஓவியம் வந்ததைக் கண்டு மகிழ்ந்தேன். நானும் இனி வரைந்து அனுப்புவேன்.

- ஜ.மலர், அரசு பெண்கள்மேல்நிலைப் பள்ளி, கரூர் மாவட்டம்.

...

யானையை விடப் பெரிய உயிரினங்களும் உலகில் வாழ்ந்திருந்தன என்பதைப் பக்கம் 16ல் படித்து வியந்து போனேன். அட்டைப் படம் மிகவும் பிரம்மாண்டமாக இருந்தது.

-ல.நஸ்ரியா, அரசு உயர்நிலைப் பள்ளி, கோவை.

...

காகித மீனை என் வகுப்பு நண்பர்களோடு சேர்ந்து செய்து பார்த்து மகிழ்ந்தேன். அதனை எனது வீட்டில் தோரணமாகக் கட்டி அழகு பார்த்தேன்.

- கே.நரேஷ், ஊ.ஒ.ந.நி.பள்ளி, வாணியம்பாடி, திருப்பத்தூர்.

...

நாம் அன்றாடம் பயன்படுத்தும் டி.வி. ரிமோட்டில் இத்தனை அறிவியல் உண்மைகள் உள்ளனவா? என்பதை படித்ததும் ஆச்சர்யமாக இருந்தது. எனது வீட்டில் உள்ளவர்களிடம் இதைப் பற்றிக் கூறினேன்.

- எம்.பானுப்பிரியா, அ.மே.நி.பள்ளி ஆவடி, திருவள்ளூர் மாவட்டம்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## 'சிவப்பு ரோஜாப் பூ' புகழ்
# தம்பி சீனிவாசன்

சிறுவர்களுக்காக அழகான பாடல்களையும் கதைகளையும் எழுதியவர் தம்பி சீனிவாசன். இவரின் இயற்பெயர் சீனிவாசன். தனது படைப்புகளை 'தம்பி' எனும் புனைபெயரில் எழுதியதால், 'தம்பி சீனிவாசன்' என்றே அழைக்கப்படுகிறார். 15.07.1930ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தத்தில் பிறந்தவர்.



இவர், புதுடெல்லியிலுள்ள சாகித்ய அகாதமியில் (கலை, பண்பாட்டிற்கான மத்திய அரசு நிறுவனம்) உதவிச் செயலாளராகப் பணிபுரிந்தார். அழ. வள்ளியப்பா ஆசிரியராக இருந்த 'பூஞ்சோலை' இதழில் குழந்தைப் பாடல்களை எழுதினார். அவை குழந்தைகளையும் அழ. வள்ளியப்பாவையும் கவர்ந்தன. அப்பாடல்களே இருவரையும் நெருங்கிய நண்பர்களாக்கின.




1959ஆம் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கம் 'சிறுவர் நாடக விழா' நடத்தியது. அதில் தம்பி சீனிவாசனின் 'தங்கக் குழந்தைகள்' என்ற நாடகம் பரிசு பெற்றது. அந்த நாடகம் நூலாகவும் வெளிவந்து, இந்திய அரசின் பரிசும் பெற்றது.

தம்பி சீனிவாசனின் 'பத்திரிகையின் கதை' எனும் நூல் குழந்தைகளுக்குப் பத்திரிகையின் வரலாற்றைக் கூறுகிறது. 'வேடன் மகன்', 'ஓலை வெடி', 'ஐக்கிய நாடுகளின் கதை', 'பயத்தை வென்ற ராமன்', 'மகாபாரதம்', 'பஞ்ச தந்திரக் கதைகள்' ஆகியவை தம்பி சீனிவாசனின் முக்கியமான நூல்களாகும். சிறார் பாடல்களில் புதிய விஷயங்களை எழுதியவர் தம்பி சீனிவாசன். அதற்கு உதாரணமாக இவர் எழுதிய 'சிவப்பு ரோஜாப் பூ' எனும் நூலில் உள்ள 'காட்டுப்பாக்கம் தாத்தாவுக்கு' என்ற பாடலைச் சொல்லலாம்.

தம்பி சீனிவாசன், யுனெஸ்கோ நடத்திய குழந்தை இலக்கியப் பயிற்சிப் பட்டறைகளில் பயின்றவர். தனது உழைப்பாலும் எழுத்தாலும் ஆலோசனைகளாலும் தமிழ்க் குழந்தை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்.


– சுகுமாரன்

# புத்தகத்தோடு பேசும் தக்ரீத்

**ஜோர்டான் நாட்டில் பிறந்தவர் தக்ரீத் நஜ்ஜார் (Taghreed Najjar). இவருக்கு ஆறு வயது இருக்கும்போது அவரது தாய் இறந்துவிடுகிறார்.**

தந்தைக்கு வெளிநாட்டில் வேலை என்பதால், விடுதியுடன் உள்ள பள்ளியில் தக்ரீத் சேர்க்கப்பட்டார். விடுதியில் ஒரே அறையில் பல படுக்கைகள் இருக்கும். ஒருவருக்கு ஒரு படுக்கை தருவார்கள். கொசு அதிகமாக இருக்கும் என்பதால், தனித்தனியாகக் கொசுவலையும் கொடுத்தார்கள். கொசு வலையை மூடிக்கொண்டால், அதுவே தனி அறைபோல இருக்கும். அங்கே மற்றவர்களுடன் பேசக் கூடாது; விளையாடக் கூடாது என்று கடுமையான பல விதிகள் இருந்தன. தெருவில் ஓடி, ஆடி விளையாடிப் பழகிய தக்ரீத்துக்கு விடுதி வாழ்க்கை பிடிக்கவில்லை.

வாசிப்பதற்காக வாரம் ஒரு நூலைக் கொடுத்தார்கள். அதைக் கொசுவலைக்குள் படுத்துக்கொண்டே படித்தார் தக்ரீத். சின்ன நூலாக இருந்தால் ஒரே நாளில் படித்து விடுவார். வேறு நூல் இல்லாததால் அந்த வாரம் முழுக்க அதையே திரும்பத் திரும்பப் படித்தார். தான் அந்த நூலுடன் பேசுவதாகவும், அதற்கு அது பதில் சொல்வதாகவும் அவர் உணர்ந்தார்.




ஒருமுறை தோழியுடன் சண்டை போட்டு விட்டார் தக்ரீத். அதற்குத் தண்டனையாக அந்த வாரம் புத்தகம் தரமாட்டேன் என்று ஆசிரியர் சொல்லிவிட்டார். தக்ரீத் மிகவும் சோகமாகி விட்டார். நூலகத்தின் வாசலில் நின்று தினமும் வேடிக்கை பார்த்தார் தக்ரீத்.

அதைக் கவனித்த நூலகர், அவரை உள்ளே அழைத்தார். படிப்பதற்கு ஒரு நூலைக் கொடுத்தார். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தொடர்ந்து நூலகம் சென்று பல நூல்களை வாசித்தார். தான் படித்த கதைகளைக் கொசுவலைக்குள் இருந்துகொண்டே மற்றவர்களுக்குச் சொன்னார். மற்றவர்கள் அக்கதைகளை விரும்பிக் கேட்டனர். அதனால், அந்தப் பள்ளியில் தக்ரீத்துக்கு நிறைய நண்பர்களும் கிடைத்தார்கள்.



சில மாதங்கள் கழித்துக் கதைகள் எழுதினார் தக்ரீத். அவையும் எல்லோருக்கும் பிடித்தன, தொடர்ந்து எழுதினார். தற்போது வரை அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அரபு மொழியில் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளுக்கு நூல்கள் எழுதியவர் இவரே. அவை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து விற்பனை செய்யப்படுகின்றன. தி லிட்டில் க்ரீன் ட்ரம் (The Little Green Drum), 'அகெயின்ஸ்ட் தி டைட்' (Against the Tide), 'ஒன் டே தி சன் வில் ஷைன்' (One Day the Sun Will Shine) போன்ற நூல்கள் புகழ்பெற்றவை.

– சிந்தன்

www.Padasalai.Net www.CBSEtips.in



# எங்க ஊரு!



**எங்கள் ஊர் பெயர் குலமங்கலம். இதற்கு முன், குலசேகரப் பாண்டியன் மங்களம் என்று இருந்ததாம். அதுதான், காலப்போக்கில் மாறி குலமங்கலம் என்று ஆகிவிட்டது என்று ஊர் பெரியவர்கள் சொல்வார்கள்.**

நமது நாடு சுதந்திரம் அடையும்வரை எங்கள் ஊர் வலையப்பட்டி ஜமீனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாகவே இருந்தது. அதற்கு முன்னால் 200 ஆண்டுகள் அப்படித்தான் இருந்தது என்று சொல்கிறார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் நம்மை ஆட்சி செய்த காலத்தில், எங்க ஊர் காவாங்கரையில் மாடு மேய்ப்பதற்குக் கூட அவர்களிடம் ரசீது பெற வேண்டிய நிலை இருந்ததாம். அப்படி ரசீது பெறாமல் மாடு மேய்க்கும் நபர்களைத் தண்டனைக்கு உட்படுத்திவிட்டு மாட்டையும் ஓட்டிச் சென்றுவிடுவார்களாம்.

அந்தக் காலத்திலேயே அரசங்குளம், காரியாபட்டி, பழங்காநத்தம் போன்ற ஊர்களில் இருந்து இங்கே வந்து குடியேறியவர்கள் அதிகம். ஏறக்குறைய ஐந்தாயிரம் மக்கள் தொகை கொண்டது எங்கள் ஊர்.

எங்கள் ஊரில் இருக்கும் பெரிய கண்மாய்க்கு முல்லைப் பெரியாற்றில் இருந்தும், வைகை அணையில் இருந்தும் தண்ணீர் வரும். எனவே, விவசாயம் செழிப்போடு நடைபெறும். ஆண்டுக்கு முப்போகமும் விவசாயம் செய்வதால், எப்போதும் பசுமையோடு காட்சியளிக்கும் எங்கள் ஊர். மதுரை மாவட்டத்திலேயே அதிகமான நெல் உற்பத்தி செய்யப்படுவது இங்கேதான். அதனால், இதைக் 'குட்டித் தஞ்சாவூர்' என்று அழைப்பார்கள்.

ஊரின் முக்கியமான இடங்களில் முருகன் கோவிலும் பள்ளிவாசலும் உள்ளன. இவற்றுக்குச் சொந்தமான நிலத்தில் மக்கள் விவசாயம் செய்துவருகின்றனர். விளைச்சலில் ஒரு பகுதியைக் கோவிலுக்கும் பள்ளிவாசலுக்கும் அளிப்பார்கள்.


சுற்றுவட்டாரத்தில் அதிகமாகத் திருவிழாக்கள் கொண்டாடும் ஊர்களில் குலமங்கலமும் ஒன்று. இங்கே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஏதேனும் திருவிழா நடக்கும்.

வைகாசி மாதத்தில் நடக்கும் திருவிழாவில் மூன்று நாட்கள் நாடக விழா நடத்தப்படும். வள்ளித் திருமணம், அரிச்சந்திரா புராணம், பவளக்கொடி போன்ற நாடகங்களை நான் முன்வரிசையில் உட்கார்ந்து பார்ப்பேன். ஆனால், நாடகம் முடியும்வரை பார்த்ததே இல்லை. பாதியிலேயே தூக்கம் வந்துவிடும்.

ஐப்பசி மாதத்தில் குதிரை எடுப்பு, ஆடி மாதத்தில் முளைப்பாரி, மார்கழி மாதத்தில் பஜனை, பங்குனியில் காளித் திருவிழா என்று திருவிழாக்கள் வந்துகொண்டே இருக்கும்.

மதுரைப் பக்கம் நீங்கள் வந்தால், அவசியம் எங்கள் ஊருக்கு வந்து பாருங்க.

- **த.ஹாசினி,** 9ஆம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, குலமங்கலம், மதுரை.






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# தூக்கணாங்குருவியும் அதன் கூடும்



**கிராமங்களில் தென்னை மரம், பனை மரம், ஈச்ச மரம், கருவேல மரம் முதலியவற்றில் தூக்கணாங்குருவிக் கூடுகளை நிறைய பார்க்கலாம். நுட்பமானதும் சிக்கலானதுமான இந்தக் கூடுகள் அழகு மிகுந்தவை. உறுதியானவை.**

தூக்கணாங்குருவிகள் கூட்டமாக வாழும். ஆண் குருவிதான் கூடு கட்டும். ஒரு கூடு கட்டுவதற்கான பொருட்களைச் சேகரிக்க அது ஏறத்தாழ 500 லிருந்து 1000 முறை பறந்து செல்கிறது.

தூக்கணாங்குருவிக் கூடு, மேலே கூண்டு போல வட்டமாகவும் அடிப்புறம் குழாய் போன்று கீழ் நோக்கியும் இருக்கும். கூடு, வைக்கோலாலும் புல்லாலும் முடிச்சிட்டு நெய்யப்படுகிறது. கூட்டின் உட்புறம் மிருதுவான வைக்கோலும் வெளிப்புறத்தில் உறுதியான புல்லும் நீளமான வைக்கோலும் பயன்படுத்தப்படுகிறது. கூட்டின் உறுதிக்காக ஈரக் களிமண், உலராத மாட்டுச் சாணம் போன்றவற்றைப் பசைபோலப் பயன்படுத்தி குருவி கூட்டை உருவாக்குகிறது. கூட்டைக் கட்டி முடிக்க 18 நாட்கள் ஆகின்றன.

கூடு ஓரளவுக்குக் கட்டி முடித்த பின் ஆண் குருவி, பெண் குருவிகளை அழைக்கும். பெண் குருவி கூட்டின் உள்ளே வந்து பார்வையிடும். அதற்கு அந்தக் கூடு பிடித்திருந்தால் ஆண் குருவி, கூட்டை முழுமையாகக் கட்டி முடிக்கும். பிறகு அவை அங்கே சேர்ந்து வாழும்.

பெண் குருவி 3லிருந்து 4 முட்டைகள் வரை இட்டு 15 நாட்கள் அடைகாக்கும். குஞ்சுகள் வளர்ந்து பறக்கத் தொடங்கியவுடன் ஆண் குருவி, அடுத்த கூடு கட்ட வேறு இடத்துக்குப் போய்விடும்.

தன் கூட்டில் மின்மினிப் பூச்சிகளைக் களிமண்ணில் ஒட்டி வைத்து, இரவு நேரத்தில் விளக்காகப் பயன்படுத்தும் பழக்கமும் இந்தப் பறவைகளிடம் உண்டு.

நீளவாக்கில் கீழ்நோக்கித் தொங்கும் இந்தக் கூடுகளின் குழாய் போன்ற அடிப்பகுதி, காற்றடிக்கும் திசைக்கு எதிர்ப்புறம் இருக்கும்படி கூட்டைக் கட்டுகிறது தூக்கணாங்குருவி. உதாரணத்திற்கு இடதுபுறத்தில் இருந்து வலது புறமாகக் காற்று வீசுவதாகக்கொண்டால் கூட்டின் இந்தக் குழாய் போன்ற அமைப்பு வலதுபுறம் நோக்கியே இருக்கும். இப்படி நிகழ்வதால் கூட்டின் உள்ளே இருக்கும் முட்டைகள் கீழே விழுந்துவிடாமல் பாதுகாக்கப்படுகின்றன.

நெல் விவசாயம் வளர்ந்தால், தூக்கணாங்குருவிகளும் பெருகும். விவசாயத்திற்கும் பறவைக்குமான நேரடி உறவை இது காட்டுகிறது.

பயிர்களைத் தின்பதால் சிலர் தூக்கணாங்குருவிகளை விரட்டுகிறார்கள்.

நெல் தின்பதைவிடவும் தூக்கணாங்குருவிகள் தின்று தீர்ப்பது விவசாயத்திற்குத் தீங்கு செய்யும் புழு, பூச்சிகளையும் வெட்டுக்கிளிகளையும்தான். இவையெல்லாம்தான் தூக்கணாங்குருவிக் குஞ்சுகளின் முக்கிய உணவு.

குறிப்பிட்ட பருவத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கணக்கான தூக்கணாங்குருவிகள் வந்து கூடுகட்டும். அறுவடை முடிந்த பிறகு அங்கிருந்து போய்விடும்.

தூக்கணாங்குருவியின் கூட்டைக் கவனித்துப் பார்த்த எந்த ஒரு மனிதரும் அந்தப் பறவையை வெறுக்கமாட்டார்!

– அன்வர் அலி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பழங்கால நாணயங்கள்!

முந்தைய காலத்தில் மக்களிடையே பண்டமாற்று முறைதான் வழக்கத்தில் இருந்தது. அதாவது ஒரு பொருளைக் கொடுத்து இன்னொரு பொருள் வாங்கிக்கொள்வது. பிறகுதான் பொருளை வாங்கிக்கொண்டு நாணயம் கொடுக்கும் பழக்கம் உருவானது. இந்தியாவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நாணயங்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதன்பிறகு, மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் பல்வேறு வகையான நாணயங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழ்நாட்டு மக்களிடையே புழக்கத்தில் இருந்த சில நாணயங்களைப் பார்ப்போம்.



## சங்ககாலச் சோழர் நாணயம்

சங்ககாலச் சோழர் ஆட்சியில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஆனாலும், ஒரு பக்கம் மட்டும் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ள ஒரு காசு கிடைத்துள்ளது. இக்காலகட்டத்தில் யானை, வேலியிட்ட மரம், காளை போன்ற உருவங்களோடு முத்திரை காசுகள் வெளியிடப்பட்டிருக்கும் என்று தெரிய வந்துள்ளது.



## தமிழகத்தில் கிரேக்கர் நாணயம்

தமிழகத்திற்கு வணிகம் செய்வதற்கு கிரேக்கர்கள் வந்தனர். கி.மு. 300ஆம் ஆண்டிலிருந்தே கிரேக்கர்கள், நம்முடன் கடல் வணிகம் செய்ததற்கு கிரேக்க காசுகளே ஆதாரமாக உள்ளன.



## கொங்கு சேரர் நாணயம்

தமிழ் நிலத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களில் ஒருவர் சேரர். கொங்கு சேரர்களின் காசுகளில் கடவுளின் கோட்டுருவம், வில், பனைமரம், விளக்கு, மீன், ஆமை, குத்துவிளக்குகள் உள்ளிட்டவை பொறிக்கப்பட்டிருக்கிறது.



## புதுக்கோட்டை தொண்டைமான் நாணயம்

புதுக்கோட்டை தொண்டைமான் வம்சம் ஆட்சி செய்த காலத்தில் வெளியிட்ட காசுகள் புகழ்பெற்றவை. ஸ்ரீவிஜயரகுநாதனின் காலத்தில் வெளியிடப்பட்ட செப்புக் காசின் முன்புறம் 'விஜய' என்று தெலுங்கு மொழியிலும் மறுபக்கத்தில் பிரகன்நாயகி உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

## இந்தோ கிரேக்கர் காசுகள்

இந்தோ கிரேக்கர் காசுகளில் ஒரு பக்கம் அரசர்களின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். சில காசுகளில் ஒரு பக்கம், அரசரும் அரசியும் உள்ள உருவங்கள் இடம்பெற்றிருக்கும். மறுபக்கம், இந்தோ- பாக்ட்ரிய தெய்வங்களான ஸீயுஸ், ஆர்திமிஸ், ஹெராகிளிஸ், பாசிடான், அபோல்லா போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.



## விஜயநகர கால நாணயம்

விஜயநகர அரசுகளின் காலத்தில் தென்னிந்தியாவில் அதற்கு முன் இல்லாத அளவுக்கு நாணயப் புழக்கம் இருந்துள்ளது. இவர்களின் நாணயங்களில் கன்னடம், தெலுங்கு, நாகரி ஆகிய மொழிகளே பயன்படுத்தப்பட்டிருந்தன. தங்கக் காசுகளின் புழக்கமும் அதிகம் இருந்துள்ளது. காசின் ஒருபக்கத்தில் அரசர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது.



உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்
மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?
பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

14417

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





# இரத்தப் பரிசோதனைக்குப் பயந்த முகில்!

கதை : கன்னல் அசுதன்
ஓவியங்கள் : தன்வீ நபர்
மொழிபெயர்ப்பு : சுரேஷ் பாலசந்தர்




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மாலையில் முகிலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் அம்மா. அங்கே, செவிலி ஒருவர் பெரிய இரப்பர் டியூபுடன் வந்தார்.

"இவர் என்னைக் கட்டிப்போடப் போகிறாரா" என்று பயந்து அம்மாவின் பின் ஒடுங்கினாள்.






மருத்துவர் சிரித்தார். "அப்படியெல்லாம் அவர் செய்யமாட்டார். இரத்தம் எடுப்பதை எளிமையாக்குவதற்காக அதை உன் கையில் கட்டுவார் அவ்வளவுதான். அதன் பெயர் டூர்னிக்கெட்*. வா... வந்து கையை மடக்கிக் காட்டு!"

முகிலின் கையில் அதைக் காட்டினார் செவிலி.



*டூர்னிக்கெட் – (Tourniquet)





அடுத்தது, ஒரு ஊசியை கையில் எடுத்தார். அதைப் பார்த்ததும் பயந்து எழுந்தாள் முகில்.

அம்மா தைரியம் சொன்னார்.

மீண்டும் நாற்காலியில் அமர்ந்து கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டாள் முகில்.



ஆண் செவிலி கையில் ஊசியைக் குத்தினார்.

ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்தாள் முகில்.

ஊசியில் இரத்தம் நிரம்பிக் கொண்டிருந்தது. அது கருஞ்சிவப்பாக இருந்தது.

மெதுவாக ஊசியை வெளியே எடுத்தார் செவிலி. ஊசி குத்திய இடத்தில் பஞ்சு வைத்து "முழங்கையை மடக்கி அப்படியே பிடித்திரு" என்றார்.

"அவ்வளவுதானா?" என்று மருத்துவரிடம் கேட்டாள் முகில். ரொம்ப வலிக்கவே இல்லையே, இதற்காகவா இப்படிப் பயந்தோம் என்று நினைத்தாள். அவள் இரத்தம் இப்போது ஒரு பிளாஸ்டிக் குழலுக்குள் இருந்தது.







அடுத்த நாள், அம்மா பரிசோதனை முடிவுகளை வாங்கிவந்தார்.

"நான் தேறிவிட்டேனா?" கவலையுடன் கேட்டாள் முகில்.

"ஆம்! இது சாதாரண காய்ச்சல்தானாம். சீக்கிரமே சரியாகிடும் என்று மருத்துவர் சொன்னார்" என்றார் அம்மா.


முகிலின் முகத்தில் புன்னகை பூத்தது.

அவளுக்கு இப்போதே சரியாகிவிட்டதுபோல் தோன்றியது.

## உங்கள் இரத்த வகை என்ன?

மனித இரத்தத்தில் உள்ள புரதத்தைப் பொறுத்து, பல்வேறு இரத்த வகைகள் இருக்கின்றன. அவை:

| | | | |
|---|---|---|---|
| A பாசிடிவ் | B பாசிடிவ் | AB பாசிடிவ் | O பாசிடிவ் |
| A நெகடிவ் | B நெகடிவ் | AB நெகடிவ் | O நெகடிவ் |



உங்கள் இரத்த வகை என்ன என்று பெற்றோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

Thanks: Storyweaver.org.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




# நூல் அறிமுகம்










**நூலின் பெயர்:**
**ஆண்கள் பலசாலியா?**
**ஆசிரியர் : சாலை செல்வம்**
**விலை: ரூ. 45/-**

இவ்வளவு பெரிய பொருளைத் தூக்குவதற்கு எங்கள் அப்பாவால்தான் முடியும் என்று பலரும் சொல்லியிருப்பீர்கள். உண்மையில், உடல் பலமாக இருப்பதற்குப் பால் வேறுபாடு உண்டா என்ற கேள்விக்குத் தெளிவாகப் பதில் சொல்லும் புத்தகம் இது.


**நூலின் பெயர்:**
**நான் நானாக இருப்பேன்**
**ஆசிரியர் : கிரீஷ். விலை: ரூ. 35/-**

சோளக்கொல்லை பொம்மை பார்த்திருக்கிறீர்களா? அந்தப் பொம்மையை ஆணா, பெண்ணா என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? பதிலை விடுங்கள். அது ஆணாகவும், பெண்ணாகவும்தான் இருக்க வேண்டுமா? திருநங்கையாகவோ, திருநராகவோ இருக்கக் கூடாதா? அப்படியான வித்தியாசமான பார்வையை வைத்து எழுதப்பட்டுள்ள புத்தகம்தான் இது.


**நூலின் பெயர்: தாத்தாவுக்குத் தாத்தா**
**ஆசிரியர் : உதயசங்கர்**
**விலை: ரூ. 35/-**

கரப்பான்பூச்சி என்றால் சிலருக்குப் பயம் இருக்கும். பாய்ந்து சென்று அதை அடிக்கவும் செய்வீர்கள். அவர்கள் எல்லாம் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது. மீனா என்ற சிறுமிக்கு எப்படி கரப்பான்பூச்சி பற்றிய பயம் போகிறது என்பதே இந்தக் கதை. கூடுதலாக வரலாற்றுத் தகவல்கள் உண்டு.

மேற்கண்ட மூன்று நூல்களையும் தனிச்சிறப்பான ஓவியங்களுடன் வழங்குவோர்:
**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,**
எண்: 68, ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை 600 006.





## ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடி



**11ஆம் பக்க விடைகள்**

## யார் யாரென்று கண்டுபிடியுங்கள்


பாரதியார்



வ.உ.சிதம்பரனார்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மக்கள் மறக்காத மக்கள் கவிஞர்!





தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகில் செங்கப்படுத்தான்காடு எனும் கிராமம் இருக்கிறது. இங்குதான் நம் கவிஞர் 1930ஆம் ஆண்டு, ஏப்ரல் 13ஆம் தேதி, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அப்பா, அருணாச்சலனார். அம்மா, விசாலாட்சி. அப்பா, நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவதில் திறமை பெற்றிருந்தார்.

கவிஞர், உள்ளூரில் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பக் கல்வி பயின்றார். குடும்பத்தின் வறுமை காரணமாக மூன்று ஆண்டுகள் மட்டுமே அந்தப் பள்ளிக்கூடத்தில் அவரால் பயில முடிந்தது. ஆனால், இயல்பிலேயே அவருக்குக் கவிதை பாடும் ஆற்றல் இருந்தது. அதனால் கவிஞர், தன் பத்தொன்பதாம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.



வறுமையின் காரணமாகப் பல்வேறு வேலைகள் பார்த்தார் கவிஞர். பிறகு நடிப்பின் மீது ஆர்வம் ஏற்பட்டதால், 'சக்தி நாடக சபா'வில் சேர்ந்து நாடகங்களில் நடித்தார். பிறகு, புதுச்சேரிக்குச் சென்று, பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் கற்றார். அவர் நடத்திய 'குயில்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

கவிஞர், பாட்டு எழுதும்போதும், மனைவி மகனுக்குக் கடிதங்கள் எழுதும்போதும், தாளின் மேலே, 'வாழ்க பாரதிதாசன்' என்று எழுதிவிட்டுத்தான் தொடங்குவார்.

கவிஞர், 'ஜனசக்தி' பத்திரிகையில் பாடல்கள் எழுதினார். பிறகு திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதினார். விரைவிலேயே பெரும்புகழ் இவரைத் தேடி வந்தது.

இவரின் பாடல்கள் சாதாரண மக்களுக்கும் புரியும்படி எளிமையாகவும் ஆழ்ந்த கருத்துகள் கொண்டவையாகவும் இருந்தன. திரைப்படங்களில் 187 பாடல்கள் எழுதினார் கவிஞர்.

1959ஆம் ஆண்டு கோயம்புத்தூர் தொழிலாளர்கள் சங்கம் இவருக்கு, 'மக்கள் கவிஞர்' எனும் பட்டத்தை அளித்தது. அதே ஆண்டிலேயே அக்டோபர் 8ஆம் தேதி கவிஞர் மறைந்தார். அப்போது அவருக்கு வயது 29.

1993ஆம் ஆண்டு இவரது பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இன்றும் கவிஞரின் பிறந்தநாள் பல ஊர்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.



மக்கள் கவிஞரின் நினைவைப் போற்றும் வகையில், தமிழக அரசு பட்டுக்கோட்டையில் இவருக்கு மணிமண்டபம் அமைத்திருக்கிறது. இங்கு அவரது மார்பளவுச் சிலையும், அவரது கையெழுத்துப் பிரதிகளும் அவரது ஒளிப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அந்த மக்கள் கவிஞர் யார்?

அவர்தான், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்!

ஓவியங்கள் : மணிவர்மா

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# உணர்வை வெளிப்படுத்தும் தாவரங்கள்!

**தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை அறிவோம். அன்பு, அச்சம், வருத்தம் போன்ற உணர்வுகளும் அவற்றுக்கு உண்டு.**

தாவரங்களுக்கு உணர்வு உண்டு என்று கண்டுபிடித்தார், இந்திய விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ். அவர், 1900ஆம் ஆண்டிலேயே சில அறிவியல் பரிசோதனைகள் மூலம் இதை நிரூபித்துள்ளார்.


### புலன் கடந்த உணர்வு

தாவரங்களின் உணர்வுகளை அறிந்துகொள்வதற்கு உதவியாக சந்திரபோஸ் கண்டுபிடித்த கிரஸ்கோகிராப் (Crescograph) உள்ளிட்ட கருவிகள் இன்றைய விஞ்ஞானிகளுக்குப் பயன் தருகின்றன. குறிப்பாக, 'கால்வனோ மீட்டர்' (Galvanometer) எனும் கருவி, தாவரங்களில் ஏற்படும் மாற்றங்களை ஆயிரம் மடங்கு மிகைப்படுத்திக் காட்டும் திறன் கொண்டது.

சந்திரபோஸின் ஆய்வுகளால் கவரப்பட்டு, 1970இல் அமெரிக்க விஞ்ஞானி கிளீவ்பாக்ஸ்டர் (Cleve Backster), புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட உணர்வு (Extrasensory perception) தாவரங்களுக்கு உண்டு என்று நிரூபித்தார். அவரைத் தொடர்ந்து பல அறிஞர்களும் இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொண்டு நிரூபித்துள்ளனர்.

### பயந்து நடுங்கும் செடி!

தாவரங்களின் உணர்வுகளை அறிந்துகொள்ள, பாலிகிராப், கால்வனோ மீட்டர் (Polygraph, Galvanometer) போன்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். தாவரங்களுக்கு உணர்வு உண்டு எனும் கருத்தை, அறிஞர்களின் ஒரு பகுதியினர் ஏற்றுக்கொண்டனர். மற்றொரு பகுதியினர் மறுத்தனர்.



கால்வனோ மீட்டர்



கிளீவ்பாக்ஸ்டர், ட்ரசீனா செடியை (Dracaena Cane Plant) கால்வனோ மீட்டர் கருவியுடன் இணைத்தார். அந்தச் செடியின் இலையை, தான் அருந்திக்கொண்டிருந்த காபி கோப்பையில் மூழ்கச் செய்தார். கருவி, மாற்றம் எதையும் காட்டவில்லை. சற்று நேரத்துக்குப் பிறகு, இந்த இலையைத் தீயில் கொளுத்திப் பார்ப்போம் என்று முடிவு செய்தார் கிளீவ்பாக்ஸ்டர்.

அவர் பெட்ரோலையும் தீப்பெட்டியையும் கொண்டு வருவதற்கு முன்பாகவே, அந்தச் செடி எரிக்கப்படுவதாகத் தன் மனதில் நினைத்துப் பார்த்தார். உடனே கால்வனோ மீட்டர் வேகமாக ஓடியது. ட்ரசீனா செடி பயத்தில் நடுங்குவதாகக் குறித்துக்கொள்ளப்பட்டது.

அவர் பெட்ரோலும் தீப்பெட்டியும் எடுத்து வருவதற்கு முன்பே, தான் எரியப்போகிறோம் என்பதை அந்தச் செடி, புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட உணர்வின் (E.S.P.) வாயிலாக, அறிந்து கொண்டதாகப் பதிவு செய்தார். பெட்ரோலையும் தீப்பெட்டியையும் எடுத்து வந்த பிறகு, கிளீவ்பாக்ஸ்டர் இலையைக் கொளுத்தும் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். அப்போது கால்வனோ மீட்டர் அமைதியாக இருந்தது. அந்தச் செடி பெட்ரோலையும் தீப்பெட்டியையும் கண்டு சற்றும் பயப்படவில்லை. அந்தப் பொருட்களைப் பயன்படுத்தும் மனிதர்கள் மீதுதான் அந்தச் செடிக்குப் பயம்.

அதே போல ஒரு தாவரத்தின் அருகே ஒரு கோழியோ, ஆடோ வெட்டப்பட்டால் அந்தத் தாவரத்துக்குப் பய உணர்வு ஏற்படுகிறது. அப்படியென்றால், ஒரு மரத்தை வெட்டும்போது, வெட்டப்படும் மரத்துக்கும் அதன் பக்கத்தில் உள்ள மரங்களுக்கும் என்ன மாதிரியான உணர்வு இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

**- கா. கார்த்திக் - தமிழ்தாசன்**

*('மண்ணின் மரங்கள்' - எனும் நூலில் இருந்து)*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


நான் யார் தெரியுமா?
E.T. THE EXTRA-TERRESTRIAL
ஹாய் நண்பர்களே! நான்தான் ஈடி.. என்னை நினைவிருக்கிறதா?
இயக்குநர் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க் 1982ல் எடுத்த E.T. The Extra-Terrestrial படத்தில் நான் நடித்திருக்கிறேன்.
நான் வேற்று கிரகவாசியாக நடித்திருந்தாலும் உண்மையில் நான் ஒரு இயந்திர பொம்மை. என்னை பொம்மலாட்டம் போல இயக்கி நடிக்கவைத்தார்கள்!
டைனோசர்களை வைத்து ஜுராசிக் பார்க் படங்களை எடுத்தவர்தான் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்.
படத்தில் என் பாத்திரத்திற்கான வயது ஒரு கோடி ஆண்டுகள்!
நான் நடித்த ஈடி படத்திற்கு நான்கு ஆஸ்கர் விருதுகள் கிடைத்தன.

## ‘ஓகே கண்மணி..’


ஹலோ கண்மணி.. விளையாட வர்றியா?
இல்லடா, நான், என் அண்ணன், அப்பா எல்லாரும் சேர்ந்து வீட்டை க்ளீன் பண்ண போறோம்
இந்த வீட்டு வேலைகள எல்லாம் எங்க அம்மாவும், அக்காவும்தான் பண்ணுவாங்க.. அதெல்லாம் பொண்ணுங்க வேலை.
வீட்டுல எல்லாரும்தானே இருக்கோம்! அதனால பசங்க, பொண்ணுங்க எல்லாரும் சேர்ந்துதான் க்ளீன் பண்ணணும். நீயும் உங்க அம்மாவுக்கு உதவி செஞ்சா சந்தோஷப்படுவாங்க...
ஓகே கண்மணி.. இனி நானும் என்னோட வீட்டு வேலைய செய்யிறேன்.

# ஜூலை மாதம் பிறந்த நாள் சிறப்பு தினங்கள்

## 16



**அருணா ஆசப் அலி**

இவர் கல்வியாளர், சமூகச் செயற்பாட்டாளர். இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றவர். 1942ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை காந்தியடிகள் கொண்டு வந்தபோது மும்பையில் உள்ள கோவாலியா டேங்க் மைதானத்தில் துணிச்சலாக சுதந்திரக் கொடியை ஏற்றி சரித்திரத்தில் இடம்பிடித்தவர்.

## 17

**சர்வதேச நீதி தினம்**



சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்துக்கான உடன்படிக்கை ஏற்கப்பட்ட நாள் ஜூலை 17. வளர்ந்து வரும் சர்வதேசக் குற்றவியல் நீதிக்கான அமைப்பை அங்கீகரிக்கும் விதமாக இந்நாள் சர்வதேச நீதி தினமாக அனுசரிக்கப்படுகிறது.

## 18



**எத்திராஜ்**

சென்னை எத்திராஜ் பெண்கள் கல்லூரியை நிறுவியவர் இவர். ஆங்கிலேயர் ஆட்சியில் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் இவரே. பல முக்கியமான வழக்குகளில் வாதாடியிருக்கிறார்.

## 27



**கல்பனா தத்தா**

இவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர். ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டக் குழுவில் தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்டவர். 1943ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சத்தின்போது நிவாரணப் பணிகளில் தன்னார்வலராகப் பங்கேற்றவர்.


## 28 உலக இயற்கைப் பாதுகாப்பு தினம்



உலகம் முழுவதும் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாக்க பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தால் 1948ஆம் ஆண்டு முதல் ஜூலை 28ஆம் நாளை இயற்கைப் பாதுகாப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இயற்கையைப் பாதுகாப்பதன் மூலம், இயற்கை நம்மைப் பாதுகாக்கும் என்பதே இந்தத் தினத்தின் நோக்கம்.

## 29 உலக புலிகள் தினம்

2010இல் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் நடந்த புலிகள் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் உலகப் புலிகள் நாள் உருவாக்கப்பட்டது. இந்நாளின் நோக்கம் புலிகளின் இயற்கை வாழ்விடங்களைக் காப்பாற்றுவதற்கான உலகளாவிய அமைப்பை ஏற்படுத்தி, பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகும்.



## 30 உலக நண்பர்கள் தினம்



நல்ல நண்பர்கள் இல்லாமல் நம்மால் வாழ முடியுமா? மனிதர்களின் வாழ்வில் நட்புக்கு மிக முக்கியமான இடம் உண்டுதானே! நட்பைப் போற்றும் நாள் இது!

## 31 உலக வனப் பாதுகாவலர் தினம்




சர்வதேச வனப் பாதுகாவலர் கூட்டமைப்பால் 2007ஆம் ஆண்டு முதல் ஜூலை 31ஆம் நாள் உலக வனப் பாதுகாவலர் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உங்களுக்கு தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு, 
ஆறாவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006